

இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரையில் நடைபெற்ற, உஸ்வத்துன் ஹசனா முஸ்லிம் சங்கம் 100 ஆம் ஆண்டு விழா மற்றும் நூற்றாண்டு சிறப்பு மலர் வெளியீடு நிகழ்ச்சி நடைபெற்றது இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், பள்ளி மற்றும் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், பால்வளத்துறை அமைச்சர் ராஜகண்ணப்பன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி நூற்றாண்டு சிறப்பு புத்தகத்தை வெளியிட்டனர். உடன் திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைவர் சுபவீரபாண்டியன், மாவட்ட கழகச் செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ, மருத்துவர் எழிலன் எம்.எல்.ஏ. உள்பட உஸ்வத்துன் ஹசனா முஸ்லிம் சங்கம் நிர்வாகிகள் உள்ளிட்டோர் பலர் கலந்து கொண்டனர்.



சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர்நகர் கிழக்குப் பகுதி, 141 வது வட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி தலைமையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் தலைமை கழகப் பேச்சாளர் சந்தோஷ் ஜெய், தியாகராயர்நகர் மேற்கு பகுதிச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி, தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி, மகளிர் தொண்டர் அணி மாவட்ட அமைப்பாளர் மோனிஷா கருணாநிதி, 141 வது வட்ட கழகச் செயலாளர் லலிதாபுரம் என்.துரை, 141 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ராஜா அன்பழகன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஜெ.ஜானகிராமன், 141 வது வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டனர்.

### குளிர்கால உண்டு உறைவிட முகாமினை

# பள்ளி மாணவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்!

### அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வேண்டுகோள்!

மதுரை, டிச.31-

தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறையின் கீழ் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் வாயிலாக 28 தகைசால் பள்ளிகளில் 6 முதல் 9 மற்றும் 11-ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு 5 நாள் குளிர்கால உண்டு உறைவிட முகாம் 26.12.2024 தொடங்கி 30.12.2024 வரை தமிழ்நாட்டின் ஐந்து இடங்களில் வெவ்வேறு தலைப்புகளில் நடைபெற்று வருகிறது.

இந்த முகாமானது வழக்கமான பாடத்திட்டத்திற்கு அப்பால் கற்றலை மேம்படுத்த ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்குகிறது. அந்த வகையில் மதுரை மாவட்டம் கிடாரிபட்டியில் உள்ள தனியார் கல்லூரியில் நடைபெறும் முகாமில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நேரில் கலந்து கொண்டார்.

விண்ணில் விஞ்ஞானத் தேடல் என்ற தலைப்பின் கீழ் நடைபெறும் இந்த முகாமில் மதுரை மற்றும் சுற்றுவட்டார மாவட்டங்களில் உள்ள தகைசால் பள்ளிகளை சேர்ந்த மாணவர்கள் பங்கேற்றுள்ளனர். இது நாள் வரை முகாமில் பெற்ற அனுபவம் குறித்து அமைச்சர் முன்னிலையில் மாணவர்கள் பகிர்ந்து கொண்டனர். அப்போது பேசிய ஒரு மாணவர், "முகாமிற்கு பங்கேற்க வந்தபோது தன்னுள் தயக்கமும் பயமும் நிரம்ப இருந்ததாகவும் ஆனால் முகாமில் கலந்து கொண்ட பின்னர் அந்த தயக்கமும் பயமும் துளி கூட இல்லாமல் போய்விட்டதாகவும்" மகிழ்ச்சியோடு தெரிவித்தார்.

அதேபோல மற்றொரு மாணவர், விண்வெளி சார்ந்த ஆய்வாளர் ஆக வேண்டும் என்கிற தன்னுடைய கனவுகளுக்கு வழி காட்டும் வகையில் இந்த முகாம் அமைந்துள்ளதாகவும் அது குறித்த தேடலை அதிகப்படுத்தும் வகையில் உற்சாகம் பெற்றுள்ளதாகவும் கூறினார்.

இதனைத் தொடர்ந்து மாணவர்கள் மத்தியில் உரையாற்றிய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்,

"கோடை காலத்தில் மாணவர்களுக்கான சிறப்பு முகாம்கள் வருடம் தோறும் நடத்தப்பட்டு வரும் நிலையில், இந்த ஆண்டு குளிர் கால முகாம்கள் நடத்த வேண்டும் என திட்டமிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட முகாம் சிறப்பாக நடைபெற்று வருவதை பார்க்க முடிகிறது. அதையும் அறிவியல் சார்ந்து நடத்த திட்டமிட்டோம்.

குழந்தைகளை வளர்ப்பது பெரிய விஷயமல்ல. அறிவோடும்; பகுத்தறிவோடும் வளர்ப்பதுதான் பெரிய விஷயம். குழந்தைகளிடம் 'சோற்றை உருட்டாதே... உருட்டினால் தாய் தகப்பனை உதறி தள்ளிவிடுவாய்' என்று சொல்வார்கள். ஆனால் சுடச்சுட சாப்பிடு; உருட்டி உருட்டிச் சாப்பிட்டால் செரிக்காது' என்று தான் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

'முகாமிற்கு வரும்போது இருந்த பயம்; இப்போது இல்லை' என மாணவச் செல்வங்கள் சொன்னார்கள். அவர்கள் தன்னம்பிக்கை பெற்றுவிட்டார்கள் என்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

"நல்ல தோழமையும் நல்ல உரையாடலும் தான் வாழ்க்கைக்கான நாடி நரம்புகள்" என கூறுகிறார் ஆங்கில எழுத்தாளர் ஐசக் வால்டன். எனவே மாணவர்கள் அதற்காக இந்த குளிர்கால உண்டு உறைவிட முகாமினை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்".

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் மூர்த்தி, சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், மாவட்ட ஆட்சியர் சங்கீதா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### திருவள்ளூர் மின்பகிர்மான மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தை

# அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் திறந்து வைத்தார்!

### திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, - வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ பங்கேற்பு!

திருவள்ளூர் டிச 31-

திருவள்ளூர், மாவட்ட திருவள்ளூர் நகராட்சிக்குட்பட்ட பெரியகுப்பம் அருகே திருவள்ளூர் மின்பகிர்மான மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் திறப்பு விழா நடைபெற்றது. இதில் மாவட்ட கலெக்டர் த.பிரபுசங்கர் தலைமை தாங்கினார். மேற்பார்வை பொறியாளர் ஏ.சேகர் வரவேற்றார். சட்ட மன்ற உறுப்பினர்கள் திருத்தணி எஸ்.சந்திரன், திருவள்ளூர் வி.ஜி.ராஜேந்திரன், மின் வாரிய செயற்பொறியாளர்கள் திருவள்ளூர் ஆர்.கனகராஜ், திருத்தணி பாஸ்கர், திருமழிசை பாலசுப்பிரமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்கள்

இதில் சிறப்பு அழைப்பாளராக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் கலந்து கொண்டு புதிய அலுவலகத்தை திறந்து வைத்து திறந்து அலுவலகத்தை பார்வையிட்டார்.

இதனை தொடர்ந்து நடைபெற்ற தேசிய மின் சார சிக்கன வார விழா பேரணியையும் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த விழிப்புணர்வு பேரணி மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் இருந்து ஆயில் மில் அம்பேத்கர் சிலை வரை நடைபெற்றது. இந்த பேரணியில் மின் சிக்கனம் தொடர்பான விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியபடி மின்வாரிய ஊழியர்கள் பேரணியாக சென்றனர்.

இந்த விழாவில் மாநில மாவட்ட நிர்வாகிகள் கே. திராவிட பக்தன், ஆர். டி.இ.ஆதிசேஷன் நகர மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், நகரச் செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன், ஒன்றிய செயலாளர் ச.மகாலிங்கம், உதவி செயற் பொறியாளர்கள் ஜானகிராமன், யுவராஜ், பாலச்சந்தர், சற்குணம், ரமேஷ், செந்தில் குமார், திருநின்றவூர் ஜீவானந்தம், உதவி பொறியாளர்கள் தட்சிணாமூர்த்தி, பாலாஜி, நஜிம்பாபு, லக்ஷ்மிகாந்தன், ராணி, காஞ்சனா, குமரகுரு, குமார், திருநின்றவூர் கிருஷ்ணமூர்த்தி, கழக நிர்வாகிகள் தி.ஆ.கமலக்கண்ணன், என்.பரசுராமன், சம்பத் ராஜ், இ.குப்பன், டி.என்.ஆர்.சீனிவாசன், டி.மோதிலால், டி.ஆர்.திலீபன், வி.எஸ்.நேதாஜி, சி.சு. விஜயகுமார், கோவிந்தம்மாள், காந்திமதி, தனலட்சுமி, அயூப் அலி, வேலாயுதம், வீனஸ், விஜயகுமார், டி.செல்வின், பி.மோகம், ஆ.பவளவண்னன், ராஜ், செல்வதுரை, பாலு, பாஸ்கர், ஜி.எம்.கிஷோர், அமர்நாத், சுரேஷ், ராஜ்பால், மற்றும் மின்வாரிய பணியாளர்கள், தொழிற்சங்கத்தினர் கலந்து கொண்டனர்.



சென்னை வடக்கு மாவட்டம், ராயபுரம் மேற்கு பகுதி, 48 வது வட்ட தி.மு.க. சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு கழகக் கொடியேற்றி அறுசுவை உணவை மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. வழங்கினார். ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ., பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், இரா.செந்தில்குமார் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தா.இளைய அருணா, ந.மனோகரன், ஆர்.வெற்றிவீரன், மு.கோபி, க.நாகம்மை, பொதுக்குழு உறுப்பினர்கள் கி.ராஜேந்திரன், நா.சண்முகம், விஜயலட்சுமி விஜயகுமார் எம்.சி., பா.வேளாங்கண்ணி எம்.சி., பகுதி நிர்வாகிகள் கு.ரமேஷ், எம்.கே.இஸ்மாயில், எஸ்.திருஞானம், வி.மலையம்மாள், ஆர்.வி.லட்சுமி வேலு, ப.சோமசுந்தரமூர்த்தி, வெ.சுசத்யநாராயணன், எஸ்.ரமேஷ், என்.விஜயகுமார், இரா.பொன்முடி, எஸ்.யுவராஜ், கோ.நித்யானந்தம், ந.மணிமாறன், என்.அயத்பாஷா, எஸ்.தங்கவாசிகி, என்.சிவகுமார், பி.பாலாஜி, சி.சின்னராஜ், கே.குணசேகரன், டபுள்ளு.எஸ்.ரவிச்சந்திரன், பாபா ஜி.சீனிவாசன், கு.எல்லன், எஸ்.ஜானகிராமன், எம்.பன்னீர்செல்வம், என்.ஹரிகிருஷ்ணன், ந.கோபி கலந்து கொண்டனர்.

### சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி தலைமையில்

# தியாகராயர்நகர் 141வது வட்டத்தில் துணை முதல்வர் பிறந்தநாள் நலத்திட்ட உதவிகள்!

### மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்கினார்! சந்தோஷ் ஜெய் சிறப்புரை!

சென்னை, டிச. 31 -

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி, 141 வது வட்ட தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தியாகராயர்நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி தலைமையில் 29.12.2024 அன்று நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

தியாகராயர்நகர் மேற்கு பகுதிச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி, தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி, 141 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ராஜா அன்பழகன், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் மோனிஷா கருணாநிதி, கோ.உதய சூரியன், ஜெ.ஜானகிராமன், பி.மாரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பி.கிருஷ்ணமூர்த்தி, வி.பழனிச்சாமி, எஸ்.எம். கார்த்திக் ராஜா, எம். மகேஸ்வரி, கே. லட்சுமிபதி, ஏ.ஆர்.இ.சுப்பிரமணி, சன் சரவணன், எம்.பாபு, ஏ.கோவிந்தராஜ், ஆர். குணசேகரன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதில் தலைமை கழக பேச்சாளர் சந்தோஷ் ஜெய் சிறப்புரை ஆற்றினர்.

இதில் வட்டக் கழகச் செயலாளர்கள் எஸ்.லட்சுமிகாந்தன், எம்.எஸ்.பழனி, மு.செல்வகுமார், எம். கிருஷ்ணமூர்த்தி, மு.ம.செந்தில்குமார், ஜி.பி. செந்தில்குமரன், ஆர்.சக்திவேல், டி.கமல், தட்சன் ஹரிஹரன், ந.மோ.முரளி, கே.எஸ்.வெல்டிங் ராஜா, பி.ஜெயகுமார் மற்றும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

141 வது வட்டக் கழகச் செயலாளர் லலிதாபுரம் என்.துரை நன்றி கூறினார்.

### சைதை மேற்கு பகுதி

# 139 'அ' வட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### வட்டச் செயலாளர் சை.மு.சேகர் அறிவிப்பு!

சென்னை, டிச. 31 -

சென்னை தெற்கு மாவட்டம் 139 அ வட்டக் கழக கூட்டம் இன்று (31.12.2024. செவ்வாய்க்கிழமை) மாலை 7 மணியளவில் 118/47 மேற்கு ஜோன்ஸ் சாலை, காந்தி தெரு சந்திப்பில் உள்ள ஆர்.சுரேஷ் இல்ல மாடியில் வட்ட அவைத்தலைவர் இ.வரதன் தலைமையில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் பகுதி செயலாளர். 10 வது மண்டல குழுத் தலைவர். எம்.கிருஷ்ணமூர்த்தி பங்கேற்று ஆலோசனை வழங்கிறார்.

இக்கூட்டத்தில் 1) 2025 ஜனவரி மாதம் 2 ஆம் தேதி அன்று காலை 9 மணிக்கு மாண்புமிகு. தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் பஜார் வீதியில் உள்ள சென்னை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் கலைஞர் திறன் மேம்பாட்டு மையம் திறப்பு விழா,

2) ஜனவரி மாதம் 4ஆம் தேதி மாலை 4மணிக்கு நந்தனம் ஒய்.எம்.சி.ஏ.திடலில் மாண்புமிகு.அமைச்சர். மா.சுப்பிரமணியன் எழுதிய கின்னஸ் கலைஞர் நூல் வெளியீட்டு விழா,

3) தமிழ்ப்புத்தாண்டு பொங்கல் விழா முன்னிட்டு ஜனவரி மாதம் 7 ஆம் தேதி அன்று வட்டம் முழுவதும் மகளிர் கோலம் போடும் நிகழ்ச்சி,

ஆகியவை குறித்து ஆலோசிக்க உள்ளதால்,

139 அ வட்டத்திற்குட்பட்ட மாவட்ட பிரதிநிதி, வட்டக்கிளை கழக நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி பிரதிநிதிகள், வட்ட செயற்குழு உறுப்பினர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், பாகத்தலைவர்கள், வட்ட இளைஞர் அணி யினர் அனைவரும் சரியாக மாலை 7.00மணிக்கு வருகை தந்து கூட்டத்தில் பங்கேற்குமாறு வட்டச் செயலாளர் சை.மு.சேகர் கேட்டுக் கொண்டுள்ளார்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு, சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி, 121அ வட்ட தி.மு.கழகத்தின் சார்பில், வட்ட கழகத்திற்கு உட்பட்ட ரோட்டரி நகர் பிரதான சாலையில், வட்ட துணை செயலாளர் சு.பலராமன், மாவட்ட பிரதிநிதி ச.லோகநாதன் ஆகியோரின் தலைமையில், மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி., வட்ட செயலாளர் சீ.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலையில், மாவட்ட செயலாளர் மற்றும் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. 1000 பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்குகினார். இந்நிகழ்ச்சியில், மயிலை மேற்கு பகுதி கழக நிர்வாகிகள், 121 அ வட்ட கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பி.எல்.ஏ.2 / பி.எல்.சி. நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் திரளாக பங்கேற்று சிறப்பித்தனர். நிகழ்ச்சியின் இறுதியில் லைன்கோவிந்தன், ஆ.கார்த்திக், இ.வினோத்குமார், எஸ்.சதீஷ்குமார் ஆகியோர் நன்றியுரை ஆற்றினார்.


